<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 195/2023</u>

<u>வழக்கு சாட்சி PW-1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | துரைப்பாண்டியன் | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 35 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 10.03.2026.

**(1ம் எதிரி ஆஜர். இதர எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். 04.06.2016 அன்று நான் டெம்போ வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றேன். அந்த டெம்போ வண்டியின் எண்.TN-76-A-9595 ஆகும். இரவு 08.30 மணியளவில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றபோது, இளவன்குளம் ரோடு சர்ச் அருகே நான் வரும்போது எதிரிகள் 3 பைக்கில் வந்தார்கள். நான் வண்டியை நிப்பாட்டினேன். எதிரிகள் சண்டைக்கு வந்தார்கள். என்னை அசிங்கமாக வார்த்தைகளால் பேசினார்கள். இராமதுரை என்னுடைய கன்னத்தில் அடித்தார். பாலமுருகன் என் மீது கல்லை தூக்கி போட வந்தார், நான் விலகிக்கொண்டேன். பாலமுருகன் கல்லை தூக்கி என்னுடைய வண்டியில் போட்டார். என்னுடைய வண்டியின் கண்ணாடி கேபின் உடைந்து ரூ.20,000/- மேல் சேதம் ஏற்பட்டது. 2 மாதங்கள் வண்டி ஓடாமல் கிடந்தது. பின்னர் நான் சங்கரன்கோவில் அரசு

மருத்துவமனைக்கு சென்று 3 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலத்தை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் வைத்து போலீசாரிடம் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.11 11:30:02 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 195/2023</u>**

**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அய்யாச்சாமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வேலுக்கோனார் | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 52 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 10.03.2026.

**(1ம் எதிரி ஆஜர். இதர எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 குமார் எனது பக்கத்து வீட்டுக்காரர். 04.06.2016 அன்று இளவன்குளம் கிருபை சர்ச் அருகே நான் ரோட்டில் பாடகலிங்கம் என்பவருடன் பேசிக்கொண்டிருந்தேன். இரவு 08.30 மணியளவில் குமாரின் மினி லாரி வண்டியை எதிரிகள் பல்சர் வண்டியில் வந்து மறித்தார்கள். ஸ்ரீராம் குமாரை சட்டையைப் பிடித்து வண்டியிலிருந்து கீழே இறக்கினார். இராமதுரையும், மரியராஜிம் குமாரை கீழே தள்ளி விட்டார்கள். பாலமுருகன் கல்லை தூக்கி அவர் மீது போட முயன்றார். குமார் விலகிக்கொண்டார், அந்த கல் மினி லாரியில் விழுந்து முன்பக்க கண்ணாடி உடைந்து ரூ.15,000/-ற்கு சேதம் அடைந்தது. எதிரிகள் கொல்லாமல் விடமாட்டோம் என்று கூறினார்கள். அசிங்கமாக பேசினார்கள். ஸ்ரீராம் பல்சர் வண்டியை எடுத்துக்கொண்டு சென்று விட்டார். இராமதுரை, பாலமுருகன், மரியராஜ்

ஆகியோர்கள் ஓடி விட்டார்கள். குமாரை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அவர் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.11 11:30:08 +0530